(31)

# மலரும் பருவத்தினருக்கான வழிகாட்டி



வெளியீடு –
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

அனுசரணை –
SAVE THE CHILDREN
JAFFNA

# கட்டிளமைப்பருவ கர்ப்பம் (Teenage pregnancy)

◆ கட்டிளமைப்பருவ கருத்தரிப்பு எனப்படுவது 19 வயது அல்லது அதற்குக் குறைந்த வயதில் கருத்தரித்தலாகும் இவற்றில் பெரும்பாலானவை திருமணத்திற்கு முன் ஏற்படுகின்ற கருத்தரிப்பாகக் காணப்படுகின்றது.

இதனால்

⇒ குடும்பத்தில் குழப்ப நிலைமை

⇒ சமூகத்தில் ஒதுக்கப்படுகின்ற நிலைமை

⇒ நண்பர்களுடன் பழக அல்லது எதிர்கொள்ள முடியாத நிலை

⇒ பாடசாலையை விட்டு இடையில் விலக வேண்டிய நிலை

போன்றன ஏற்படலாம்.



இவைபோன்ற காரணங்களால் திரு மணத்திற்கு முன் இளம் மாணவப் பராயத் தில் கருத்தரிப்பு ஏற்படுத்வதனால் சட்ட விரோத முறையற்ற கருக்கலைப்பு ஆளா கின்றார்கள்.

## சட்ட விரோதமான முறையற்ற கருக்கலைப்பினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

- கருப்பை சேதமாக்கப்படல்
- சிறுநீர்பை, குடல் போன்றன சேதப்படுதல்.
- அதிகளவான இரத்தப்போக்கு ஏற்படல்

- தாய் மரணம் சம்பவித்தல்.

*தாய் மரணத்திற்கான உடனடிக் காரணம்*


- அதிகளவான குருதி வெளியேறல்


சில நாட்களின் பின்னர் ஏற்படுகின்ற தாய் மரணத்திற்கான காரணங்கள்

- செப்ரிசீமியா **(Septicemia)** - குருதியில் கிருமித்தொற்று ஏற்படல்
- இதனால் நுரையீரல், இதயம், மூளை, சிறுநீரகம் என்பன கிருமித்தொற்றுக்கு உள்ளாதல்
- தொடர்ச்சியான குருதிவெளியேற்றம்.

## சட்டவிரோத கருக்கலைப்புக்கு உட்பட்டு உயிர் வாழ்வோரில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

### உடல் ரீதியான பாதிப்புக்கள்





- கருத்தரிக்க இயலாமை
- கருப்பை குழாய், கருப்பை என்பவற்றில் அழற்சி ஏற்படல்
- கருப்பையுடன் ஏனைய அங்கங்களான சிறுநீர்ப்பை, குடல் என்பன இணைக்கப்படல் **(Fistula)**
- தொடர்ச்சியான கருச்சிதைவு ஏற்படல் **(miscarriage)**
- இனப்பெருக்க உறுப்புக்களின் மூலமாகக் கடத்தப்படுகின்ற நோய்கள் **(STI)** ஏற்படல்
- கருப்பைக்கு வெளியேயான கருத்தரிப்பு ஏற்படல் **(Ectopic pregnancy)**
- இனப்பெருக்க உறுப்பின் தொழிற்பாடு பாதிப்படைதல்

## உள ரீதியான பாதிப்புக்கள்

- தற்கொலை முயற்சியில் ஈடுபடல்/ தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற மனநிலை ஏற்படல்
- மன உளைச்சல் ஏற்படல்
- உறவு முறையில் பாதிப்பு ஏற்படல் (குடும்ப, சமுதாய உறவு முறை)
- மதுபானம், புகைப்பிடிக்கும், போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகல்
- சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றது நிலை ஏற்படல்.

◆ இவ்வாறான உடல், உளரீதியான பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கு


- திருமணத்திற்கு முன்னரன தவறான உறவுகளை தவிர்த்தல்.
- கருத்தடை முறைகளை பயன்படுத்தல்.
- வைத்தியரின் / குடும்பநலமாதுவின் ஆலோசனைபை பெறல்.



# குடும்ப கட்டுபாட்டு முறைகள்
## *(family planning methods )*

◆ குடும்ப கட்டுபாட்டு முறையினைப் பயன்படுத்துவதனால

- தேவையற்ற கருத்தரிப்பததை தவிர்த்துக் கொள்ளமுடியும் மேலும்
- குழந்தைகளிற்கிடையிலான சரியான இடைவெளியை பேணுவதாலும் எண்ணிகையைக் கட்டுபடுத்துவதனாலும் குழந்தைகளை சரியான முறையில் வளர்க்க முடிகின்றது(பெற்றோருக்கு).



### 1) Emergency contraceptive method


இம்முறையானது சுலபமாக பயன் படுத்தப்படக்கூடிய, மலிவான முறை யாகும். இம்முறையினை பாதுகாப்பற்ற உடல் உறவின் பின் 72 மணித்தியாலங்களிற்குள் பயன்படுத்துதல் வேண்டும்.

இம்முறையானது தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருத்தடை முறை அல்ல.

⇒ 24 மணித்தியாலங்களிற்குள் பயன்படுத்தும் போது 90% பாதுகாப்பளிகின்றது.

◆ குடும்பநல மாதுவிடம் இதனைப் பெற்றுக்கொளலாம்.

## 2) ஆணுறை (*Male condom*)



⇒ இம்முறையினை பயன்படுத்துவதன் மூலம் (85%) கருத்தங்குவதில் இருந்து பாது காக்கின்றது

⇒ இம்முறையானது

- மலிவானது
- சுலபமானது
- பக்க விளைவுகள் அற்றது
- இனப்பெருக்க உறுப்புகளின் மூலம் கடத்தப்படுகின்ற நோய்கள் பரவுவது தடுக்கப்படுகின்றது.


➢ இம்முறையினை சரியாக பயன்படுத்துதல் வேண்டும். (சரியாக ஆணுறை அணியப்படல் வேண்டும்) அல்லாவிடில் ஆணுறை கிழியக்கூடிய சந்தர்ப்பமும் உண்டு. இதனால் - கருத்தரிப்பு, STI - இனப்பெருக்க உறுப்புகளினால் கடத்தப்படுகின்ற நோய்கள் ஏற்படலாம்.

➢ இம்முறையினை பயன்படுத்தும் சிவருக்கும் Allergy (ஒவ்வாமை) ஏற்படலாம்.

## ஏனைய முறைகள்

3) ஓமோன் முறைகள்

1. வாய்முலமாக உள்ளெடுக்கபடுகின்ற கருத்தடை மாத்திரை




இம்முறையினை வைத்திய ஆலோசனையை பெற்ற பின்னா் பயன்படுத்துதல் வேண்டும்.

மேலும் இம்முறையினால்

- மாத சுகவீனம் ஒழுங்காப்படுகின்றது
- மாதசுகவீனத்தின் போது ஏற்படும் வலி குறைக்கப்படுகின்றது
- மாதசுகவீனத்தின் போது அதிகளவு குருதி வெளியேற்றம் ஏற்படுதல் தவிர்க்கப்படுகின்றது. – குருதிச்சோகை **(Aneamia)** ஏற்படுதல் தவிர்க்கப்படல்

இம்முறை மூலம், இனப்பெருக்க தொகுதியினூடாக கடத்தப்படுகின்ற நோய்கள் பரவுதல் தடுக்கப்படமாட்டாது.

# 2. Depo-Provera hormonal ingestion



- இம்முறையானது 99% கருத்தங்குவதில் இருந்து பாதுகாப்பளிக்கின்றது.
- ஒவ்வொரு தடவையும் போடப்படுகின்ற ஊசியானது குழந்தை தங்குவதைத் தடுகின்றது.


➢ இம்முறையினை பயன்படுத்தும் போது மாத சுகயீனம் தற்காலிகமாக தடைப்படும், இம்முறையினை நிறுத்தி 6 – 12 மாதங்களில் மாதசுகவீனம் ஒழுங்காக ஏற்படும்.

➢ இம்முறை மூலம் இனப்பெருக்க உறுப்புக்களினால் கடத்தப்படுகின்ற நோய்கள் பரவுவது தடுக்கப்பட மாட்டாது.

➢ இதனை பயன்படுத்துவோரில், மிகச்சிலருக்கு, களைப்பு, உடல் நிறை அதிகரிப்பு என்பன ஏற்படலாம்

குறிப்பு:– மேற்குறிப்பிட்ட இரு முறைகளிலும் ஓமோன்கள் பயன்படுவதால் நீண்ட காலத்துக்கு பயன்படுத்தல் நல்லதல்ல.

# 3) IUD



➢ இம்முறை மூலம் கருத்தங்குவது 99% அளவில் தடுக்கப்படுகின்றது. T வடிவான கருத்தடை அமைப்பானது கருப்பையினுள் செலுத்தப் படுகின்றது

➢ சரியான முறையில் கருப்பையினுள் உள்ளதா என்பதனை ஒவ் வொரு தடவையும் மாதசுகவீனம் ஏற்படும் போது பரிசோதித்து கொள்ளுதல் வேண்டும்

➢ தேவை ஏற்படின் அகற்றலாம்

➢ இம்முறையினால் இனப்பெருக்க உறுப்புக்களின் மூலம் கடத்தப்படு கின்ற நோய்(STI )ஏற்படுவதை தடுக்க முடியாது

## எமது பிரதேசத்தில் குடும்ப கட்டுபாட்டு முறைகள் தொடர்பான ஆலோசனையை பெறக்கூடிய வழிகள்


➢ பொது சுகாதார குடும்பநல மருத்துவமாதுவிடம்

➢ கர்பவதிகள் கிளினிக்

➢ போதனாவைத்தியசாலை – பெண் நோயியல், மகப்பேற்று வைத்தியரிடம்.

➢ சுகவனிதையர் கிளினிக்

➢ Adolecent clinic - இனம் பராயத்ரினருக்கான கிளினிக் (இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் உள்ளது)



2006/FM/70
33

